No. of Printed Pages : 7

7037039

**1601**

பதிவு எண் | 6 | 0 | 5 | 5 | 6 | 6 | 3 |

# தமிழ் - முதல் தாள்
# Language – Part I – TAMIL – Paper I
## (செய்யுள், உரைநடை)

கால அளவு : 2½ மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்புகள் :** (i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் **49 -க்கான** விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

### பிரிவு - I
(மதிப்பெண்கள் : **20**)
### பகுதி - 1

**I.** உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக. **6x1=6**

**1.** பாண்டிய மன்னனின் அரசவையில் கண்ணகி உடைத்த சிலம்பிலிருந்து வெளிப்பட்ட பரல் __________.

(அ) முத்து (ஆ) பவளம் (இ) மாணிக்கம்

**2.** தமிழுக்குக் 'கதி' எனக் கூறப்படும் இரு நூல்கள் :

(அ) கம்பராமாயணம் மற்றும் நற்றிணை

(ஆ) கம்பராமாயணம் மற்றும் திருக்குறள்

(இ) திருக்குறள் மற்றும் சிலப்பதிகாரம்

[ திருப்புக

3. 'மேதி' என்பதன் பொருள் :

(அ) எருமை (ஆ) புலி (இ) பன்றி

4. 'பெண்களே சமூகத்தின் கண்கள்' - எனக் கருதியவர் ________.

(அ) பெரியார் (ஆ) வள்ளலார் (இ) அம்பேத்கர்

5. பேச்சுக் கலையில் இடையிடையே சுவை மிக்க சொற்களும் குணமிக்க கருத்துக்களும் பிணைத்து பேசுவது ________ எனப்படும்.

(அ) தொடுத்தல் (ஆ) எடுத்தல் (இ) முடித்தல்

6. 'இதோ ஓர் உத்தம மனிதர் போகிறார்' என யாரை திகம்பர சாமியார் கூறினார்.

(அ) தாயுமானவர் (ஆ) இராமலிங்கர் (இ) சம்பந்தர்

## பகுதி - 2

II. கோடிட்ட இடத்தை நிரப்புக. **6x1=6**

7. 'செந்நாப்போதார்' என்ற பெயரால் போற்றப்படுபவர் ________.

8. அரி என்னும் சொல்லின் பொருள்________.

9. கலித்தொகை ________ ஓசையைக் கொண்டது.

10. 'இந்தியாவின் தேசியப் பங்குவீதம்' என்னும் நூலை எழுதியவர் ________.

11. படக்கருவியைக் கண்டுபிடித்தவர் ________.

12. காவலர், இராணுவம் போன்ற பணிகளுக்கு ________ தேர்வும் எழுத்துத் தேர்வும் உண்டு.

பகுதி - 3

III. பொருத்துக. 4x1=4

13. சீத்தையர் - குப்பைக்கூளம்

14. தெறு - மாலை

15. தார் - கீழானவர்

16. செத்தை - பகை

பகுதி - 4

IV. விடைக்கேற்ற வினா அமைக்கவும். 4x1=4

17. சங்க இலக்கியங்கள் இனம், மொழி, மதம் கடந்தவை.

18. ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டறிந்தார்.

19. காந்தியடிகள், பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம், கதர் என்று கருதினார்.

20. தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்கு அரசுப் பணிகளில் இருபது விழுக்காடு ஒதுக்கித் தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

பிரிவு - II

(மதிப்பெண்கள் : 20)

பகுதி - 1

V. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். 5x2=10

21. ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது ?

22. பழியில்லா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை ?

23. துடி என்னும் பறையை உடையவனின் தோற்றம் குறித்து கம்பராமாயணம் கூறும் செய்திகளை எழுதுக.

[ திருப்புக

24. ஆதிநான் மறைநூல் கற்ற வாய்மை தவறாதவர் யார் ? ''இப்போது இங்கு அவன் உதவான்'' - என யாரிடம் கூறினார் ?

25. செய்யுளின் விதைகளாகவும் விளைபொருள்களாகவும் கூறப்படுவன யாவை ?

26. பொருள் என்னும் வளர்ப்புத் தாயால் பேணப்படும் குழந்தை எது ?

27. நந்திவர்மன் வீரம் எத்தகையது ?

## பகுதி - 2

VI. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **5x2=10**

28. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது ?

29. ஒரு நிகழ்வை மட்டும் எடுத்துக்கொண்டு அதைப் பற்றிய முழு விளக்கத்தையும் தருவது எவ்வகைப்படம் ? அதற்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.

30. பழந்தமிழர் எந்தெந்த நாடுகளுடன் கடல் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் ?

31. 'தீம்பிழி எந்திரம் பந்தல் வருந்த' என்றத் தொடர் எந்நூலில் இடம் பெற்றுள்ளது ? அத்தொடர் மூலம் அறியும் செய்தி யாது ?

32. இந்தியாவின் வாழ்வு குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது ?

33. இராமலிங்கர் புதுநெறி கண்ட புலவர் எனப் போற்றப்படக் காரணம் என்ன ?

34. தொழிற்கல்வித் துறைகள் யாவை ?

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : **24**)

### பகுதி - 1

**VII.** கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **3x4=12**

**35.** கண்ணகி குறித்து வாயிற்காவலன் கூறியவற்றை எழுதுக.

**36.** ''இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ'' - என்றத் தொடர் மூலம் அறியப்படும் செய்தி யாது ?

**37.** கண்ணகனாரின் புறநானூற்றுப் பாடல் வழி நீவிர் அறியும் கருத்து யாது ?

**38.** புலியின் கொடுஞ்செயல்கள் பற்றி உமறுப்புலவர் கூறுவன யாவை ?

**39.** ''சென்றிளைப் பாறுக முற்றிடத்தே'' என்ற கவிதைத் தொடர் மூலம் நீ அறியும் கருத்துகளை எழுதுக.

### பகுதி - 2

**VIII.** கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **3x4=12**

**40.** பெண்ணுரிமையை விளக்குக.

**41.** கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய அரும்பணி யாது ?

**42.** பேச்சின் முக்கூறுகளில் முதற்கூறு எவ்வாறு அமைதல் வேண்டும் ?

**43.** பழந்தமிழகத்தில் மருத நிலத்தில் நடைபெற்ற தொழில் குறித்து எழுதுக.

**44.** மனிதநேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது ?

[ திருப்புக

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 10)

IX. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 5x1=5

45. பதிதொறு புயல்மொழி தருமணி பணைதரு
பருமணி பகராநெற்
கதிர்தொகு வருபுனல் கரைபொரு திழிதரு
காவிரி வளநாடா
நிதிதரு கவிகையும் நிலமகள் உரிமையும்
இவையிவை யுடைநந்தி
மதியிலி அரசர்நின் மலரடி பணிகிலர்
வானகம் ஆள்வாரே

**வினாக்கள் :**

(i) இலக்கணக்குறிப்பு தருக - பொழிதருமணி

(ii) இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைகளை எடுத்தெழுதுக.

(iii) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது ?

(iv) தேவர் உலகத்தை ஆள்பவர் யார் ?

(v) பொருள் தருக - 'புயல்'

46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 5x1=5

'வினையே ஆடவர்க்குயிர்' என்கிறது குறுந்தொகை. 'முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை' என்கிறது தொல்காப்பியம். சங்ககாலத்தில் பொருளீட்டுவோர் ஆண்களே எனவும், பெண்கள் குடும்பத்தினைப் பொறுப்புடன் நடத்த வேண்டும் எனவும், பெண்கள் கடல்கடந்து செல்லக்கூடாதெனவும் கூறி வந்தனர். இன்று, இந்த நிலை முற்றிலும் மாறிவிட்டது. ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் எல்லாத் துறைகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள். இன்றைய சூழலில், இருவரும் வருவாய் ஈட்டினால்தான் குடும்பத்தினைச் சிறப்பாக நடத்த இயலும்.

**வினாக்கள் :**

(i) 'முந்நீர்' - விரித்தெழுதுக.

(ii) 'மகடூஉ' - என்ற சொல்லின் பொருள் யாது ?

(iii) இன்று பெண்களின் நிலையாக இப்பத்தி எதைக் குறிப்பிடுகிறது ?

(iv) குறுந்தொகைப் பாடல் தொடரின் பொருள் என்ன ?

(v) சங்ககாலத்தில் பொருளீட்டியவர் யார் ?

## பிரிவு - V

(மதிப்பெண்கள் : **26**)

### பகுதி - 1

**X.** கீழ்க்காணும் வினாக்களுக்குப் **பத்து வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **2x8=16**

**47.** (அ) ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் பத்து கருத்துகளையும் தொகுத்து எழுதுக.

**அல்லது**

(ஆ) வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பற்றி நல்லந்துவனார் கூறும் அனைத்துக் கருத்துகளையும் தொகுத்தெழுதுக.

**48.** (அ) பெண் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளாகப் பெரியார் கூறியுள்ளவற்றைத் தொகுத்து எழுதுக.

**அல்லது**

(ஆ) அறவழி விடுதலைப் போர் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

### பகுதி - 2

**49.** பின்வரும் மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. **2+2+6=10**

(அ) 'அரியவற்றுள்' - எனத் தொடங்கும் குறள்.

(ஆ) 'தார்' - என முடியும் குறள்.

(இ) உலகியலின் - எனத் தொடங்கும் தமிழ் வளர்ச்சிப் பாடல்.

-o0o-

பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வு - மார்ச் 19

தமிழ் முதல் தாள் - விடைக்குறிப்பு.

1) மாணிக்கம்

2) கம்பராமாயணம் மற்றும் திருக்குறள்

3) எருமை

4) பெரியார்

5) தொடுத்தல்

6) இராமலிங்கர்

7) திருவள்ளுவர்

8) நெற்கதிர்

9) துள்ளல்

10) அம்பேத்கர்

11) எடிசன்

12) வாய்மொழித்

13) கீழானவர்

14) பகை

15) மாலை

16) குப்பைக்கூளம்

17) இனம், மொழி, மதம் கடந்தவை எவை ?

18) படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டறிந்தவர் யார் ?

19) பலகோடி மக்களின் பட்டினியைப் பே க்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதியவர் யார் ?

20) தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்கு அரசுப் பணிகளில் எத்தனை விழுக்காடு ஒதுக்கித் தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது ?

21) ஆட்டுக்கடா பகையைத் தாக்க பின்வாங்கும் தன்மையைப் போன்றது.

22) பிறர்க்குப் பணிதல்

நல்வழியில் நடத்தல்

சான்றோ அறிவுரையைப் பின்பற்றல்

நல்ல நூல்களை ஆராய்தல்.

23) வேட்டை நாய்களைக் கொண்டிருப்பவன்

தோல் செருப்பணிந்த பெருங்கால்களை உடையவன்

இருள் போன்ற கரிய நிறம் உடையவன்.

25) அப்பூதியடிகள்,

அப்பூதியடிகள் திருநாவுக்கரசரிடம் கூறியது.

26) ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி

அறம், பொருள், இன்பம், வீடு

27) அருள் என்னும் குழந்தை

28) அறிவில்லாதவரான அரசர், உன் தாமரை மலர்போன்ற திருவடிகளை வணங்காதவராகித் தேவர் உலகத்தை ஆள்பவராவர்.

28) இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப்பின்பற்றதக்க வழிகளைத் தொல்காப்பியம் கூறுகிறது.

29) விளக்கப்படம்
உலகத்தமிழ் மாநாடு

30) சாவகநாடு, அரபுநாடு, யவனநாடு

31) பதிற்றுப்பத்து
கரும்பைப் பிழிய எந்திரம் இருந்தது.

32) இலட்சக்கணக்கான கிராமங்களின் வாழ்வு. அக்கிராமங்களின் வாழ்வு உழவர்கள், இளைஞர்கள் கைகளில் உள்ளது.

33) மக்கள் அறியாமை நீங்கி அறிவு ஒளிபெற சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தியதால்

34) மருத்துவம், பொறியியல்
வேளாண்மை, சட்டம்

35) பிடர்த்தலை பீடத்தில் ஏறிய கொற்றவை அல்லள்
இறைவனை நடனமாடச் செய்த பத்ரகாளி அல்லள்
காட்டில் உறையும் காளி அல்லள்
தாருகனின் மார்பைப் பிளந்த துர்க்கை அல்லள்
கன்னியர் எழுவருள் இளையவளாகிய பிடாரி அல்லள்.

36) குகன் கொண்டு வந்த பொருட்கள் கிடைத்தற்கு அரியன
அன்பால் தூய்மையானவை
அமுதத்தைவிடச் சிறந்தன
நாங்கள் விரும்பி உண்டதற்குச் சமம்.

37) பொன், பவளம், முத்து தோன்றும் இடம் தொலைவு
மாலையாக கோக்கும் போது அழகாக தோன்றும்.
அதுபோல் சான்றோர் சான்றோருடன் சேர்வர்.

38) சிங்கத்தைத் தவிர்த்து பிற மிருகங்களை உண்ணும்
யானையின் மார்பைக் கீறி, இரத்தம் குடிக்கும்
உறங்காது இருக்கும்
இடியைக் காட்டிலும் அதிகமாக முழங்கும்.

39) செடிகள் பூப்பதற்கு முன் ஓய்வு எடுப்பதில்லை
வெற்றியால் துன்பங்கள் ஓடும்
தடைகளைக் கண்டு தயக்கம் கூடாது
வெற்றி பெற்ற பிறகு ஓய்வு பெறலாம்.

40) பெண்கள் உரிமை பெற்று புதுஉலகைப் படைக்க வேண்டும்
ஆணுக்குப் பெண் இளைப்பில்லை
பெண்கள் தம் கணவனுக்கு மட்டும் உழைக்கும் அடிமையாக இராமல் மனித சமுதாயத்திற்கு தொண்டு புரியவேண்டும்.

42) எடுத்தல்
பேச்சினைத் தொடங்குவது எடுப்பு.

தொடக்கம் நன்றாக இருக்க வேண்டும்

தட்டுத்தடங்கலின்றிப் பேச தொடக்கமே அடித்தளம்

கேட்போரை வயப்படுத்தும்முறையில் தொடங்க வேண்டும்.

41) அம்பேத்கர் 1946 இல் மக்கள்கல்விக்கழகத்தைத் தோற்றுவித்தார்.

சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில் இன்றைய அறிவுவளர்ச்சிக்கு உரிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

43) பழந்தமிழகத்தில் உழுபவரே உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்பது குறள்.

உழவுத் தொழிலைப் பெரிதும் போற்றினர்.

உழவுக்குச் சிறப்புப் பெற்ற மருதநிலம் வயலும் வயல் சார்ந்த இடம்.

44) மனிதாபிமானமும் தேசாபிமானமும் ஒன்று.

இராமனைப் போற்றக் காரணம் மனிதநேயம்

மனிதநேயம் உலகம் உய்ய வழிவகுக்கும்

மனிதப் பண்புகளுடன் வாழ்வதே சிறப்பு.

45) 1. வினைத்தொகை

2. பதிதொறு
கதிர்தொகு
நிதிதரு
மதியிலி. - தி அடி எதுகை

3. நந்திக் கலம்பகம்

4. அறிவில்லாதவரான அரசர்

5. மேகம்.

46)

1. ஆற்றுநீர், ஊற்றுநீர், கடல்நீர்.
2. பெண்கள்
3. பெண்கள் எல்லாத் துறைகளிலும் பணிபுரிகின்றனர்.
4. ஆண்களுக்குத் தொழில் புரிவதே உயிர்.
5. ஆண்கள்.

47)

அ) * உயிரினும் ஓம்பப்படுவது ஒழுக்கம், அது அனைத்து சிறப்புகளையும் தரும்.

* ஒழுக்கத்தால் எய்துவது மேன்மை, இழுக்கத்தால் எய்துவது எய்தாப் பழி.

* நன்றிக்கு வித்தாவது நல்லொழுக்கம்.

* என்றும் இடும்பைத் தருவது தீயொழுக்கம்.

* ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இருக்காது.

ஆ) இல்வாழ்வு - வருந்தி வந்தோர்க்கு உதவுதல்

பண்பு - சான்றோர் வழி அறிந்து ஒழுகுதல்

அன்பு - சுற்றம் தழுவி வாழ்தல்

அறிவு - அறிவில்லார் சொல் பொறுத்தல்

பொறை - இகழ்வாரைப் பொறுத்தல்.

48)

அ.

அடிப்படைத் தேவைகள் :

பெண்கல்வி

பெண்கள் கல்வி பெறுவது அவர்கள் உரிமை

சமுதாய மாற்றத்திற்கு அவசியம்

உலகப் படிப்பும் ஆராய்ச்சிப் படிப்பும் தாரளமாய்த் தரவேண்டும்.

பெண்ணுரிமை

பெண்கள் உரிமைப் பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும்.

ஆணுக்குப் பெண் இளைப்பில்லை.

சொத்துரிமை

அரசுப்பணி.

ஆ.

போராட்ட முறைகள் இரண்டு.

1- போர்முறையில் உரிமையை நிலைநாட்டுவது

2- அறவழி விடுதலைப் போர்.

ஆங்கிலேயரைத் துன்புறுத்தி விடுதலைப் பெறுவதனைவிட, அமைதியான முறையில் அவர்களை எதிர்த்து, மனம் மாறச் செய்து விடுதலை பெறுவதே சிறந்தது என்றார்.

49) அ. அரியவற்றுள் எல்லாயும்ம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

ஆ. உலகத்தோ டொட்ட ஒழுகல், பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

இ. உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்
இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்
எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்தோ மில்லை
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்.